ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය / எனது இல. / My No. } 

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 11 .05 2021

ஜெனரல் சவேந்திர சில்வா,

தலைவர்,

கோவிட் 19 பரவுவதை தடுக்கும் தேசிய தொழிற்பாட்டு நிலையம்,

இராஜகிரிய..

## கோவிட் 19 தொற்று நோய் நிலை உருவாகியுள்ளவர்களை தனிமைப்படுத்தல் செயற்பாட்டிற்காக அனுப்பும் விடயம் தொடர்பாக

கோவிட் தொற்று நிலை உருவாகியுள்ள பயங்கரமான தருணத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் இலங்கை மக்களை தொற்று நோயிலிருந்து பாதுாக்கும் நோக்கில் செயற்படும் உங்களது படையணியினால் மேற்கொள்ளப்படும் பணிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உயர்வாக மதிக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நாட்டினுள் பெருகி வரும் நோயாளர்களின் எண்ணிக்கையானது மிகவும் வேகமாக அதிகரித்து வருவதுடன் அவர்களை அவர்கள் வசிக்கின்ற இடத்திலிருந்து பொருத்தமான பாதுகாப்புள்ள நிவாரண நிலையங்களுக்கு அல்லது வைத்தியசாலைகளுக்கு அனுமதிப்பதை மிகவும் துரிதமாக மேற்கொள்ளுதல் மிகவும் அத்தியவசியமானதொன்றாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்த்துள்ளது என்றும், இச்செயற்பாட்டினை மேற்கொள்கின்ற போது உருவாகியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

இதன் மூலம் இச்செயற்பாட்டுடன் தொடர்புபட்ட சில விடயங்களை முறையாக தெரியப்படுத்துவதன் மூலம் மிகவும் சிறந்த சேவையொன்றினை குறிப்பிட்ட நோயினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்குவதற்கும் குறிப்பிட்ட நோயின் தாக்கத்திற்கு உட்படாதவர்களை பாதுகாப்பதற்கும் இது காரணமாக இருக்குமென்றும் நாம் நம்புகின்றோம். இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக தங்களது அவதானத்தை செலுத்த வேண்டுமென நாம் கருதுகிறோம்.

1. தற்போது கோவிட்-19 தொற்றுக்கு உள்ளான நோயாளர்களை அனுமதிக்கும் வைத்தியசாலைகள், நிவாரண நிலையங்கள் எவை என்பதை பகிரங்க படுத்துதல்.
2. கோவிட் 19 தொற்றாளர்களை வைத்தியசாலைகளுக்கு அல்லது நிவாரண நிலையங்களிற்கு கொண்டு செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டிய நோய் தொற்றாளர்கள் பாவிக்கின்ற பொருட்களின் பட்டியல் ஒன்றினை முன்னமே தெரியப்படுத்துதல்.
3. அடையாளப்படுத்தப்பட்ட நோயாளியொருவரை அல்லது நோய் தொற்றிற்கு உள்ளான குழு ஒன்றினை வைத்தியசாலை அல்லது நிவாரண நிலையமொன்றிற்கு கொண்டு செல்வதற்கு முன்னர் அவர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு போதுமான கால அவகாசமொன்றினை வழங்குதல்.

ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

4. நோயாளியை கொண்டு செல்கின்ற இடம் தொடர்பாக நோயாளியின் பொறுப்பாளருக்கு அல்லது நெருங்கிய உறவினருக்கு நோயாளியை வெளியே அழைத்துச்செல்லும் போது எங்கு கொண்டு செல்கின்றோம் என்ற தகவலையும் அந்நிலையத்தின் தொலைபேசி இலக்கத்தினையும் அவர்களது உறவினர்களுக்கு வழங்குதல்.

5. நோயாளியினை கொண்டு செல்லும் போது குறிப்பிட்ட நோயாளி தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டவராயின் அல்லது தீராத நோயிற்காக மருந்து பாவிப்பவராயின் அவர்களுக்கு தேவையான மருந்துகளை எடுத்துச் செல்கிறார்களா என்பது தொடர்பாக விசாரித்து கொள்ளுமாறு நோயாளியினை கொண்டு செல்லும் குழுவிற்கு அறிவித்தல்.

6. நோயாளி இயலாமையுடைய நபராயின் அல்லது சிறு பிள்ளையாயின் அவர்களை கண்காணிப்பதற்காக மாற்று வழிகளை கையாளுதல்.

7. ஒரே குடும்பத்தில் சிலர் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் போது முடியுமானவரை அவர்களை ஒரே இடத்தில் வைத்து வைத்திய நிவாரணங்களை வழங்குதல்.

8. வைத்திய நிவாரணத்திற்கு உட்படுத்தும் போது இயலுமானவரை குறிப்பிட்ட நபரின் நிலையான வசிப்பிடத்திற்கு அருகில் உள்ள இடமொன்றினை தெரிவு செய்து கொள்ளுவதற்கு முயற்சித்தல்.

9. சிறு பிள்ளைகள் இருக்கும் போது விஷேடமாக தாயிலிருந்து தனிமைப்படுத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10. தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளி நிவாரண நிலையத்தில் தொடர்ந்தும் அவரது நோயிற்கான சிகிச்சையினை பெறுகிறார் என்பதனை உறுதிப்படுத்துதல்.

11. பல்வேறு நோய் நிலைமையில் உள்ளவர்களுக்கு அவர்களது நோயிற்கு பொறுத்தமான உணவு வகைகள் வழங்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்.

குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக தங்களது கவனத்தை செலுத்தி செயற்படுவீர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்ற அதேவேளை இதனூடாக கோவிட் 19 தொற்று நோயினை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் செயற்பாடுகளை மிகவும் வெளிப்படையாகவும் முறையாகவும் மேற்கொள்ளலாம் என்பது இலங்கை மனித உரிமமைகள் ஆணைக்குழுவின் நம்பிக்கையாகும்.

**இந்த அறிவித்தலானது 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் அடிப்படையிலானது என்பதை கருணையுடன் கவனத்திற் கொள்ளவும்.**

**கலாநிதி. ஜகத் பாலசூரிய**
**தவிசாளர்,**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**


ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk